4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் 2023-2024-ல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 2024-2025-ல் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்த விவரங்கள் சிறுகணினிகளில் பதிவேற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7–5–2022 அன்று விதி 110–ன்கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்" அறிவிக்கப்பட்டு, திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவரவர்கள் தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பத்து முக்கியத் திட்டங்கள் குறித்து தெரிவிக்குமாறு கடிதம் மூலமாகக் கேட்டுக்கொண்டார்கள். "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 2023–2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 2024–2025 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்த விளக்கங்கள் PDF வடிவத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் இருக்கைக்குமுன் உள்ள சிறுகணினிகளில் தனித்தனியே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023–2024 ஆம் ஆண்டிற்கான . . . (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

குறு, சிறு தொழிலாளர்கள், மின் கட்டண உயர்வினால் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தங்கமணி அண்ணே ஒரு வார்த்தை கேளுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வாரங்களாக குறு, சிறு தொழில் செய்பவர்கள் மின் கட்டண உயர்வினால் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அரசினுடைய கவனத்திற்கு. . .*